1987 மார்ச் 2]

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள. உமையாள்புரத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுதல்.

*20—(*வினா எண் 9153)* **திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித்தர அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-20)

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டிலேயே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. தாட்கோவின் மூலமாக அந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே மனுவும் கொடுக்கப்பட்டது. எனவே இப்போதாவது உமையாள்புரம் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உமையாள்புரம் கிராமத்தில் உண்மையாகவே பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அந்த இடத்தில் வருகிற ஆண்டில் தாட்கோ மூலமாக வீடுகள் கட்டித்தரப்படும்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, உண்மையாகவே 1980 ஆம் ஆண்டில் அங்கே பட்டா கொடுக்கப்பட்டு விட்டது. இதில் எந்த விதமான உண்மைக்குப் புறம்பான செய்தியுமில்லை. ஏற்கெனவே என். ஆர். ஈ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் சம பங்கு கொடுப்பதைப் போலவே இந்தத் திட்டத்தின் கீழும் வீடு கட்டும் பணியில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சம பங்குகொடுத்து கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆர். எல். இ. ஜி. பி. மற்றும் என். ஆர் .ஈ. பி. போன்ற திட்டங்கள் மூலமாக நிறைய வீடுகளை நாம் ஏற்கெனவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தி லும் கட்டிக் கொடுத்து வருகிறோம். ஆனால் கடந்த ஆண்டைப் பொறுத்த வரையில் தாட்கோ மூலமாக 3,222 வீடுகள் தான் ஒதுக்கப்பட்டன. அவை பல இடங்களுக்குப் பிரித்துக் கொடுக்க கப்பட்டிருக்கின்றன. எனவே வருகிற ஆண்டில் உமையாள்புரம் கிராமத்தில் தாட்கோ மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110 இன் கீழ் தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை

சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் குடி நீர் விநியோகம் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை நகரிலும் பிற மாவட்டங்களிலும் தற்போதுள்ள குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை ஒன்றினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்னை நகரிலும் பிற மாவட்டங்களிலும் தற்போதுள்ள குடி நீர் விநியோகம் குறித்தும் வரும் மாதங்களில் நிலைமையைச் சமாளிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை குறித்தும் ஒரு அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில், 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியன்று மூன்று நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 5,220 மில்லியன் கன அடியாக இருந்தது. ஆகவே சென்ற ஆண்டு மாமூலான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய மொத்தக் கொள்ளளவு 710 மில்லியன் கன அடியாகவே உள்ளது. எனவே மாமூலான நேரத்தில் 55 மில்லியன் காலன்கள் வழங்கப்பட்டதைக் குறைத்து இப்போது